முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

2024ம் வருடம் ஜுலை திங்கள் 6 ஆம் நாள் சனிக்கிழமை

அ.வ.எண்.9/2022ல் வழக்கிடை மனு எண்.3/2022

M. பாலாஜி ......மனுதாரர்/வாதி.

/எதிர்/

1. M. ஏழுமலை .......1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி.

2. M. பாபு .......Proposed party/2ம் எதிர்மனுதாரர்.

இம்மனுவானது என் முன்பாக இறுதிவிசாரணைக்கு 27.06.2024 அன்று கொண்டுவரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாண்டுரங்கன், அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சுஜாதா, அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவை மனுதாரர்/வாதி, உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் மனு தாக்கல் செய்து Proposed party/2ம் எதிர்மனுதாரரை, 2ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் சேர்ப்பதற்காக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

**<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் : –</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி, 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக குறித்தவகை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு 01.08.2022 ஆம் தேதி மனுதாரர் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து, பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அசல் வழக்கானது வா.சா.1 யை, 1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை செய்வதற்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் 11.08.2022 ஆம் தேதி 1ம் எதிர்மனுதாரர் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 9 ன் கீழ் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்து, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை பரிசீலனை செய்தபோது தான் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் ஆகியோர்களுக்கு இடையில் தாவா சொத்து குறித்த அசல் வழக்கு எண்.19/2022 வழக்கானது 29.07.2022 ல் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் Submit to decree உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியவந்தது. 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரர் ஆன

Proposed party யும் தாவா சொத்தின் மீதான மனுதாரரின் உரிமையை மோசடி செய்ய மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளதால் Proposed party யான பாபுவை இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமானது. எனவே இம்மனு அனுமதிக்கப்படவேண்டும்.

**3. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:—**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு, சட்டப்படியும், பொருண்மையின் படியும் நிலைக்கத்தக்கது அல்ல. 1ம் எதிர்மனுதாரர், அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை 2ம் எதிர்மனுதாரருக்கு ரூ.30,00,000/— ற்கு விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டு 28.01.2019 ஆம் தேதி கிரைய ஒப்பந்தம் எழுதி அன்றைய தினமே ரூ.15,00,000/— 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொண்டு மீதி கிரைய தொகையாக ரூ.2,00,000/— 15.5.2020 ஆம் தேதியும், ரூ.12,00,000/— 04.09.2021 ஆம் தேதியும் பெற்றுக் கொண்டு சாட்சிகள் முன்னிலையில் கிரைய ஒப்பந்தத்தில் மேற்குறிப்பு செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராததால் 13.03.2022 ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் அந்த அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராததால், 2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.19/2022 தாக்கல் செய்து, 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக கிரைய

பத்திரம் எழுதிக்கொடுக்க இரண்டு மாதகால அவகாசம் கொடுத்து 29.07.2022 ஆம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீதி கிரைய தொகை ரூ.1,00,000/− நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய லாட்ஜ்மென்ட் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப் படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். 2ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக, 2ம் பிரதிவாதியாக சேர்க்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 04.08.2021ல் மனுதாரருக்கு, 1ம் எதிர்மனுதாரரான பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின் பேரில் ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி மனுதாரர் அசல் வழக்கினை தாக்கல் செய்ததில் மனுதாரரான வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதனை பெற்றுக் கொள்ள மனுதாக்கல் செய்து நிலுவையில்

உள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையிலிருந்து தாவா சொத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரரான பாபு அசல் வழக்கு எண்.19/2022 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து இருவரும் வஞ்சமாக கூட்டு சேர்ந்து தாவாப்படி தீர்ப்பாக 1ம் எதிர்மனுதாரரர் ஒப்புக்கொண்டு 29.07.2022ல் தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டதாகவும், தாவா சொத்தில் மனுதாரரின் உரிமையை மோசடி செய்யவேண்டி எதிர்மனுதாரர்கள் இருவரும் கூட்டு சேர்ந்து அசல் வழக்கு எண்.19/2022ல் தீர்ப்பு பெற்றுள்ளதாகவும் எனவே 2ம் எதிர்மனுதாரரான பாபுவை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்தால் தான் வழக்கில் நியாயமான தீர்வு காண இயலும் என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டி உத்தரவு பிறப்பிக்குமாறு கோருகின்றார்.

7. 1ம் எதிர்மனுதாரர் இம்மனுவில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டு 04.08.2021ல் 1ம் எதிர்மனுதாரர் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் 28.01.2019ல் ரூ.15,00,000/-ம், 15.05.2020ல் ரூ.2,00,000/-ம், 04.09.2021ல் ரூ.12,00,000/- ம் பெற்றுக்கொண்டதாகவும், 04.08.2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி 1ம் எதிர்மனுதாரர் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க

முன்வராததால் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.19/2022, தாக்கல் செய்து 29.07.2022ல் தீர்ப்பும் பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை அனுசரித்து மீதி கிரைய தொகை ரூ.1,00,000/–ஐ 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டு 2ம் எதிர்மனுதாரருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் மீதி கிரைய தொகை ரூ.1,00,000/–ஐ 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ள மறுத்ததால் 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் லாட்ஜ்மெண்ட் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபனை செய்யப்படுகிறது.

8. இவ்வழக்கு தாவா சொத்து சம்மந்தமாக ஒரு கிரைய ஒப்பந்தத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் மீது ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பும் பெற்றுள்ளதை மனுவிலிருந்து அறியமுடிகிறது. இந்த நிலையில் அசல் வழக்கு எண்.19/2022 ன் தாவா சொத்து சம்மந்தமாக வாதிக்கு, 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதித்தரவேண்டும் என்று பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அச்சொத்து சம்மந்தமாக தீர்ப்பு பெற்றுள்ள 2ம் எதிர்மனுதாரரும் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். எனவே இம்மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று முடிவு காணப்படுகிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் நாள் சனிக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

இருப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.